# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2022.07.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தம்)

***1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 12.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *1982* ஆம் ஆண்டின் *6* ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் *3* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பின்வரும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையின் அமைப்பை மாற்றுவதற்குமாகும்:-

(அ) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அச்செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அலுவலரொருவர்; அத்துடன்

(ஆ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவராகவிருக்க வேண்டிய உறுப்பினரொருவர்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *32* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் "அமைச்சர்" என்னும் சொல்லமைப்புக்கு புதிய வரை விலக்கணமொன்றை உட்புகுத்துவதற்குமாகும்.

## இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம்
## (திருத்தம்)

*ச.வ.- ஓ. 1/2020*

### *1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1982ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாரு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) கூட்டுத்தாபனமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) பதவிவழி உறுப்பினரொருவர் அதாவது, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அச்செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அலுவலரொருவர்;

(ஆ) பின்வரும் முறையில் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படுபவர்களுமான நான்கு உறுப்பினர்கள்:-

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவராகவிருக்கவேண்டிய உறுப்பினரொருவர்;

(ii) கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவராகவிருக்கவேண்டிய உறுப்பினரொருவர்;

(iii) *1966* ஆம் ஆண்டின் *37* ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியொருவராகவிருக்கவேண்டிய உறுப்பினரொருவர்;

(iv) *1971* ஆம் ஆண்டின் *47* ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியொருவராகவிருக்கவேண்டிய உறுப்பினரொருவர்; அத்துடன்

(இ) தொலைக்காட்சிப் பொறியியலில் அல்லது வேறு வகைகளினவான பொறியியலில் அல்லது சட்ட அல்லது நிதிசார் கருமங்களில் அல்லது

நிருவாகத்தில் அல்லது தொழில் உறவுகளில் அல்லது ஒலிபரப்பு மற்றும் தொடர்பாடல் துறையில் பரந்த அனுபவம், தகுதி மற்றும் ஏற்றங்கீகாரம் உடையவர்களென அமைச்சருக்குத் தோன்றுவோரான (இதனகத்துப் பின்னர், ''நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.";

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில், "உறுப்பினர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (6) ஆம் உட்பிரிவில், ''எவரேனும் உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் நியமிக்கப் பட்ட உறுப்பினர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அதன் (7) ஆம் உட்பிரிவில், ''எவரேனும் உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவரேனும் நியமிக் கப்பட்ட உறுப்பினர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) அதன் (8) ஆம் உட்பிரிவில், ''உறுப்பினர் எவரையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அதன் (9) ஆம் உட்பிரிவில், ''உறுப்பினரெவரும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, "முகவர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" "அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் குறித்தளிக்கப்படுகின்றரோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.